Training for Balasevikas

*340 Q—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the details of the training given to Balasevikas in this State?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இம் மாநிலத்தில் பால சேவகிகளுக்கான பயிற்சித் திட்டங்களாவன:

(1) சென்னையிலுள்ள குழந்தைகள் நல இந்திய மன்றம் (Indian Council for Child Welfare) பாலசேவகிகளுக்கான பயிற்சி நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றது. இதற்கான பயிற்சிக்காலம் ஓராண்டாகும். இப்போது பன்னிரண்டாவது பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகின்றது.

(2) கிராமப்பகுதிகளில் பாலர் பள்ளிகளை நடத்துகின்ற பாலசேவகிகள், எஸ். வி. நகரத்திலும், டி. கல்லுப்பட்டியிலும் உள்ள கிராம வளர்ச்சிப் பணிப் பயிற்சி நிலையங்களில் 3 மாதங்கள் பயிற்சி பெறுவதற்குச் சமூக நலத் துறை இயக்குநர் ஏற்பாடு செய்கிறார்.

(3) படித்தும் வேலைவாய்ப்பில்லாதவர்களுக்காக, அண்மையில் இந்திய அரசு ஏற்பளித்த விரைவுத் திட்டத்தின்கீழ் தொடங்கிய 600 குழந்தைகள் நல மன்றங்களில் கீழ்க்கண்ட ஆறு நிறுவனங்களில், குழந்தைகள் நலத்திட்ட அமைப்பாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும் சென்னை, சமூக நலத்துறை இயக்குநர் ஏற்பாடு செய்கிறார்:—

1. குழந்தைகள் நல இந்திய மன்றம் (Indian Council for Child Welfare) சென்னை.

2. ஔவை இல்லம், சென்னை.

3. பாலர் கல்வி நிலையம், சென்னை.

4. திரு. அவினாசிலிங்கம் மனை இயல் கல்லூரி, கோவை.

5. குடும்ப நலத் திட்டம் குழந்தைகள் நலப் பயிற்சி நிலையம், காந்திகிராமம்.

6. சேவை இல்லம், தாம்பரம் (அரசு).

1974 மார்ச் 9]

THIRU N. DENNIS: May I know about their employment opportunities?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதில் இந்தியன் கௌன்ஸில் பார் சைல்ட் வெல்பேர் நடத்துவதில் 515 பேர்கள் ஏற்கெனவே பயிற்சி முடித்து 455 பேர்கள் இப்போது பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். 1,840 காப்பகங்களில், எஸ்.வி. நகரத்திலும், டி. கல்லுப்பட்டியிலும் பயிற்சி பெற்ற அத்தனை பேருக்குமே வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. படித்து வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு சமீபத்தில் எடுத்த க்ராஷ் ப்ரோக்ராம் மூலம் 600 நிலையங்களில் ஒவ்வொரு நிலையத்திலும் ஐம்பது பேர்கள், ஐம்பது பேர்கள் என்று இரண்டாகப் பிரித்து அவர்களுக்கு நிலையங்களில் பயிற்சி பெற வேண்டுமென்று புதிய திட்டம் துவக்கப்பட்டு, இதில் 320 நபர்கள் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு விரைவில் வேலை வாய்ப்பு தரப்படும்.

THIRU B. VENKATASWAMI: The present salary of Bala-sevikas is very low. I think the Government is giving only Rs. 100. Will the Hon. Minister see that their pay is enhanced?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்தியன் கவுன்ஸில் ஃபார் சைல்ட் வெல்பேர் என்ற நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு ரூ. 210-5-250-10-300 என்ற வகையில் சம்பளம் தரப்படுகிறது. மூன்று மாதங்கள் ட்ரெய்னிங் எடுத்து எஸ். வி. நகரத்திலுள்ள, டி. கல்லுப்பட்டியிலும் பயிற்சி பெற்றவர்களுக்குத்தான் ரூ. 50 தரப்பட்டு வருகிறது. அவர்கள் செய்கிற வேலைக்கு அது போதும் என்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களை மேம்படுத்தல்.

*341 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வயல்களில் படிந்துள்ள மண்ணை அகற்றுவதற்காகும் செலவினை அரசே ஏற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?